# வெற்றிடங்கள்

# அரசகரும மொழிகள் ஆணைக்குழு

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் பின்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சிறந்த தேக ஆரோக்கியம் மற்றும் சிறந்த நன்னடத்தையுடன் கூடிய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | மொழி அதிகாரி | 03 |
| 02. | மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரி | 07 |

**01. மொழி அதிகாரி**

**கல்வித் தகைமைகள்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மொழி, (சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளைப் பாடங்களாகக் கொண்ட) மொழியியல், மொழிபெயர்ப்புக் கற்கை அல்லது சமூக விஞ்ஞானம் போன்ற துறைகளுக்கு அமைவாகப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**02. மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரி**

**2.1. கல்வித் தகைமைகள்**

**அடிப்படைத் தகைமைகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட மனித வள முகாமைத்துவம் அல்லது சமூக விஞ்ஞானம் அல்லது மொழி குறித்த பட்டமொன்றைப் பெற்றிருத்தல்
2. நிர்வாகம்/ஒருங்கிணைப்பு, விசாரணை நடவடிக்கைகள் குறித்த அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
3. கணனி அறிவு

**மேலதிகத் தகைமைகள்**

1. சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மும்மொழிகள் குறித்த அறிவு
2. தகவல் தொழிநுட்பம்/சட்டம்
3. இதழியல்/வெகுசனத் தொடர்பாடல்
4. கருத்திட்ட முகாமைத்துவம்
5. மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் குறித்த அறிவு

**பொதுத் தகவல்கள்**

**வயதெல்லை**

28.07.2025 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- பதவிக்குரிய கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் உகந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்**

1. மொழி அதிகாரி (JM 1-1- 2025) 72,650-10×1,360-18×2,040-122,970
2. மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரி **(MA 5-2 2025)** 62,310-10×1,360-15×1,670-5×2,040-111,160

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தனியார் பல்கலைக்கழகங்களில் பெற்றுக் கொண்ட பட்டங்களுக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சான்றுப்படுத்தப்பட்ட கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

இப் பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்தற்றதுமான பதவிகளாகும். நியமனதாரிகள் ஊழியர் சேமலாப நிதியத்துக்குப் பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும். தொழில் தருநரிடமிருந்து 12% ஆகும். ஊழியரிடமிருந்து 8% ஆகும். நியமனதாரியின் சம்பளத்திலிருந்து 3% இற்கு சமனான தொகை ஆணைக்குழுவினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு செலுத்தப்படும்.

பதவியொன்றிற்கு நியமனமொன்றைப் பெற்றுக்கொள்ளும் ஒருவர் 03 வருட தகுதிகூர் நிலைக் காலப்பகுதிக்கு உட்படுவார். அவரது சேவை வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது எனின் மற்றும் முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் தகுதிகூர் நிலைக் காலப்பகுதியின் இறுதியில் அவர் சேவையில் உறுதிப்படுத்தப்படுவார். அரச ஊழியர்கள் மாகாண அரச சேவையிலும் நியதிச்சட்ட சபைகளிலும் கூட்டுத்தாபனங்களிலும் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் ஏற்புடைய திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

தகைமைகளுடனான விண்ணப்பதாரிகள் ஏற்புடையவாறு நேர்முகப் பரீட்சையொன்றிற்கு மற்றும்/அல்லது எழுத்துமூலப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவதோடு, குறித்த நேர்முகப் பரீட்சையின் மற்றும்/அல்லது எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்பப்படிவங்கள்**

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 28.07.2025 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் 'தவிசாளர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, ஜனஜயசிட்டி கட்டடத் தொகுதி, 09 ஆம் மாடி, நாவல வீதி, இராஜகிரிய' எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஏற்புடைய பதவியைக் குறிப்பிடல் வேண்டும். இந் நியதிகளுக்கு அமைவாகக் காணப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**தவிசாளர்**
**அரசகரும மொழிகள் ஆணைக்குழு,**
**'ஜனஜயசிட்டி கட்டடத் தொகுதி',**
**09 ஆம் மாடி, நாவல வீதி, இராஜகிரிய.**

11.07.2025